

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வாரச் சந்தை கட்டும் பணியினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர்க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகராட்சி, 30வது வார்டு ஆலடிக்களத்தில் தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின் கீழ் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ்ராஜா, தாராபுரம் நகர்மன்றத் தலைவர் கு.பாப்புக்கண்ணன், நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், மாவட்ட துணை செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பிரபாவதி பெரியசாமி, மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் வி.கமலக்கண்ணன், தாராபுரம் நகராட்சி ஆணையாளர் திருமால் செல்வம், நகராட்சி பொறியாளர் சுகந்தி உள்பட நகர்மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### திருவிடைமருதூர் தி.மு.க சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு விழா - தி.மு.க. பவள விழா மாபெரும் பொதுக்கூட்டம்!

## திருச்சி என்.சிவா எம்.பி. சிறப்புரை!

தஞ்சாவூர் அக்.27- தஞ்சை வடக்கு மாவட்டம், திருவிடை மருதூர் தி.மு.க சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா, தி.மு. கழக பவள விழா மற்றும் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு துணை முதல்வர், முனைவர் கோவி.செழியன் அவர்களுக்கு உயர்கல்வித் துறை அமைச்சர் என உயர் பொறுப்புகள் வழங்கிய தலைமைக்கு நன்றி தெரிவித்து இன்று (27.10.2024 ஞாயிற்றுக்கிழமை) மாலை 06.00 மணிக்கு திருவிடை மருதூர், கடைவீதியில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் திருவிடை மருதூர் பேரூர் செயலாளர் சுந்தர.ஜெயபால் வரவேற்புரையாற்றுகிறார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெறுகிறது. இதில் சி.ஆனந்தன், எம். இரகுபதி, பவுன் இரா. மனோகரன், ஜோதி கோவிந்தராஜ், க.அண்ணாதுரை, கோவி.மாதவன், எஸ்.கலியமூர்த்தி, எ.கலிய பெருமாள், ஆர். முகில், ஆர்.செந்தில், எஸ். சந்திரமோகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாநிலங்களவை குழுத் தலைவரும், கழக கொள்கைப்பரப்புச் செயலாளருமான திருச்சி என்.சிவா சிறப்புரையாற்றுகிறார்.

தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சாக்கோட்டை க. அன்பழகன் எம்.எல்.ஏ, கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், மாநில இலக்கிய அணி செயலாளர் ஆடுதுறை மு.உத்திராபதி ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

குடந்தை மாநகரச் செயலாளர் சு.ப. தமிழழகன், ஒன்றியச் செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், எஸ்.கே.முத்துச்செல்வம், கூகூர் சி.அம்பிகாபதி, கோ. க. அண்ணாதுரை, கோ.தாமரைச்செல்வம், மிசா.என்.மனோகரன், இர. உதயசந்திரன், என். நாசர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, மாநில அயலக அணி துணை செயலாளர் இராம.விஜயன், மாவட்டக் கழக நிர்வாகி கள் கோவி.அய்யாராசு, க.நசீர் முகமது, செ. நடராஜன், ஜெயலெட்சுமி நடராஜன், எஸ்.துரை முருகன் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய பெருந் தலைவர்கள், பேரூர்க் கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

கூட்ட நிறைவில் முன்னாள் பேருராட்சி தலைவரும், மாவட்ட பிரதிநிதியுமான இரா.கோபாலகிருஷ்ணன் நன்றியுரையாற்றுகிறார்.

## பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** தம்பி....! ஒன்றிய பா.ஜ.க. அரசின் அமலாக்கத்துறை வைத்திலிங்கத்தின் மீதும், எடப்பாடியின் நண்பர் இளங்கோவன் மீதும் பாய்ந்திருக்கிறதே ?

**பட்டணம் :** **ஆமாம் அய்யா, பா.ஜ.க.வுக்குப் புதிய கூட்டாளிகளைச் சேர்ப்பதில் அமலாக்கத்துறை இறங்கி இருக்கிறதோ என்ற அய்யப்பாடு சிலருக்கு ஏற்பட்டுள்ளது.**

**இடிக்க வேண்டியதை இடித்தால், நடக்க நினைப்பது நடக்கும் என்ற நம்பிக்கையோ என்னவோ ?**

### தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட, மாநில, மாநகர, அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு

தி.மு.க. மாணவர் அணி மாவட்ட, மாநில, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 9.11.2024 - சனிக்கிழமை, காலை 9.00 மணியளவில், கரூர், கோவை ரோடு, டான்சி அருகில் உள்ள "பிரேம் மகாலில்" எனது தலைமையில்,

கரூர் மாவட்டக் கழகச் செயலாளரும் - மின்துறை அமைச்சருமான வி.செந்தில்பாலாஜி மற்றும் மாநில மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ்காந்தி - இணைச் செயலாளர்கள் சி.ஜெரால்டு, எஸ்.மோகன் மற்றும் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், ரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், கா.பொன்ராஜ், வி.ஜி.கோகுல், திருமதி பூரணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

அதுபோது மாவட்ட, மாநில, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1) துணை முதலமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் பிறந்த நாள்;

2) "தமிழ் மாணவர் மன்ற" - அமைப்பினை ஏற்படுத்தி, அதில் உறுப்பினராக சேர்த்த படிவங்களை ஒப்படைத்தல் - குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 25.10.2024

**சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி



விழுப்புரம் பொன்னங்குப்பத்தைச் சேர்ந்த மோகனவேல் என்பவர் உஸ்பெகிஸ்தான் நாட்டில் நடைபெற்ற ஆசியா சேம்பியன்ஷிப் போட்டியில் பென்காக் சிலாட் பிரிவில் கலந்துகொண்டு வெண்கல பதக்கத்தை வென்றார். அதனை தொடர்ந்து இந்த வெற்றிக்கு உறுதுணையாக இருந்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி ஆகியோருக்கு நன்றி தெரிவித்து வாழ்த்துக்களைப் பெற்றார் . அனைத்து விளையாட்டு கழகங்களின் ஒருங்கிணைப்பாளர் வாலிபால் மணி, பொன்னங்குப்பம் முரளி உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

### அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் சிறப்புரை!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## கவிச்சுடர் கவிதைப்பித்தன் – த.சந்திரசேகரன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, அக்.27 - புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் 24.10.2024 வியாழக் கிழமை மாலை 4 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகம் பெரியண்ணன் மாளிகையில் உள்ள கீரை தமிழ்ச்செல்வன் அவை கூடத்தில் மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி தலைமையில் நடைபெற்றது. புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயயலாளர் வழக்கறிஞர் கேகே.செல்லபாண்டியன் அனைவரையும் வரவேற்று சிறப்புரை யாற்றினார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை யாற்றினார். மேலும் புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளர், மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் வண்ணை அரங்கநாதன், விராலிமலை சட்டமன்றத் தொகுதி பார்வையாளரும், தஞ்சை துணை மேயர் அஞ்சுகம் பூபதி, கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர், கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணைச் செயலாளர் கார்த்திக்கேயன் என்.வேல்ச்சாமி ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள். முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்

கவிச்சுடர் கவிதைப்பித்தன், புதுக்கோட்டை மாநகர செயலாளர் ஆ.செந்தில், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், த.சந்திரசேகரன், வி. என். மணி, சுப.சரவணன், கே. ஆர்.என்.போஸ், எஸ்.எஸ். கருப்பையா,க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, சு.சண்முகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வுகளில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், தவ. பாஞ்சாலன், வெ.முத்து கிருஷ்ணன், மு.க.இராம கிருஷ்ணன், என்.சேட்டு, எம்.பரமசிவம், மா.தமிழ் அய்யா, மு.பி.ம.சத்திய சீலன், ஆர்.ஆர். எஸ்.மாரி முத்து ஓ.எஸ்.வெங்கடாசலம், சி.சண்முகம், அ. இளங்குமரன், கே.பி.அய்யப்பன், ஆர்.ஆர்.சாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம். பழனியப்பன், என்.சாத்தையா, ஆர்.செல்லத்துரை, இராசு.சந்தோஷ், எம்.செந்தில்குமார், சி.ஆர்.வி. சித்ரா, பேரூர் கழக செயலாளர்கள் பா. அண்ணாத்துரை, உ.முருகேசன், முகமது ரிஷா மற்றும் மு. கலியமூர்த்தி, எம்.எம். பாலு, இராம. செல்வராஜ், மாலா ராஜேந்திரதுரை, உரக்கடை எம். கருப்பையா, டாக்டர் செ. குறிஞ்சி வாணன், செந்தாமரை பாலு, சி. அரங்கநாயகம், வி.ஜி. ஆர்.மணிவண்ணன், வி. என்.எம்.பாலு, தவசுமணி, அ.பிரபா, வே.ராஜேஸ், டி.எம்.ஆர். ராமமூர்த்தி, சூசைராஜ், புத்தாம்பூர் சுப்பையா, எம்.ராஜா, எஸ்.வி.ஆர். ஸ்டாலின், என். வீரய்யா, கவிவேந்தன், மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன் முத்துச்சாமி,

விளாப்பட்டி சிவா, அன்சாரி பாசித், துவாரை டி.செல்வம், கை. பழனிச்சாமி, மணிமொழி மனோகரன், வெற்றிச் செல்வன், கி. சுப்பிரமணியன், சுமோ பாலு, மா.மணிவேலன், முத்தழகு பழனிவேலு, பா.ரெங்கராஜ், சேட் (எ) ஷாஜகான், மு.ராஜதுரை, ராமலிங்கம், ஆ.ஜேம்ஸ், தெய்வானை, ராயல் சபா, செ.ரமேஷ், ஆசிரியர் எம். ரமேஷ், எம்.கே.அறிவுடை நம்பி, டி.முரளிதரன், கலையரசன், ஆ.மரிய எட்வின், எம்.டி.ராமசாமி, சிப்காட் சந்திரசேகரன், வடவாளம் க.செ.மணிமாறன், காதர் கனி, சி.மதியழகன், பால் ராஜ், எழில்ராஜா, தேன்கனிப்பட்டி ராஜா, இதயம் அப்துல்லா, கே.எம்.எஸ். குமார், நைனா முகமது, க.செல்லையா, அற்புத ஹென்றி, சத்தியமங்கலம் ஜெயராமன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் நிறைவாக, மாவட்டப் பொருளாளர், துணை மேயர் எம். லியாகத் அலி நன்றி கூறினார்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் சேலம் மாவட்டம், ஏற்காடு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மக்கள் சந்திப்பு திட்ட முகாம் 25.10.2024 அன்று நடைபெற்றது. உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம், சேலம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி அ.அபிநயா உள்ளிட்ட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஏ.எல். சுப்பிரமணியன்

### அக்டோபர் 27 (2012)



பேரறிஞர் அண்ணா அவர்களின் காலந்தொட்டு, மாணவப் பருவத்தில் இருந்தே தனது வாழ்க்கையை கழகப் பணிகளுக்காகவே ஒப்படைத்து அண்ணாவின் இதயத்தில் இடம் பிடித்தவர்.

தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் – கழக சட்டத்துறைச் செயலாளர் ஆகிய கழகப் பொறுப்புகளை வகித்தவர்.

நெல்லை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு மூன்று முறை வென்று, சட்டப்பேரவை உறுப்பினராகப் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

நெல்லை மாநகராட்சியின் முதல்மேயராகப் பொறுப்பேற்று 2006ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை சிறப்பாகப் பணியாற்றியவர்.

"நெல்லைச் சீமையே தனது அன்பு உடன்பிறப்புக்களில் ஒருவரை இழந்து நெஞ்சம் கலங்கி நிற்கிறது. யாருக்கு நான் எப்படி ஆறுதல் கூறுவேன்? எனக்கு நானே ஆறுதல் கூறிக் கொள்கிறேன்" என தலைவர் கலைஞர் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**